(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

9 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் ஒன்பது



nselva.com

காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. காத்தல் தொழிலைச் செய்யும் கடவுள் யார்?
   1) சிவன் 2) பிரம்மா 3) விஷ்ணு 4) சக்தி
2. பிரம்மாவுக்குச் சார்பாக பொய்ச்சாட்சி கூறிய பூ எது?
   1) தாழம்பூ 2) தாமரைப்பூ 3) துளசிப்பூ 4) குறிஞ்சிப்பூ
3. மகாபாரத்தில் சகிப்புத் தன்மைக்குச் சிகரமாக விளங்கியவர் யார்?
   1) கிருஷ்ணர் 2) தருமன் 3) பீஷ்மர் 4) அருச்சுனன்
4. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்ற குறள் குறிக்கும் விழுமியப் பண்பு எது?
   1) கூட்டுப் பொறுப்பு 2) சகிப்புத்தன்மை
   3) சமூக நல்லிணக்கம் 4) மனித நேயம்
5. பஞ்சாட்சரப் பதிகம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது?
   1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) ஏழு
6. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?
   1) நட்சத்திரம் 2) கரணம் 3) திதி 4) யோகம்
7. அருணாசல தேசிகர் பின்வருவோரில் யாரிடம் நெருக்கமான உறவு பூண்டிருந்தார்?
   1) ஆறுமுகநாவலர் 2) சுப்பிரமணிய பாரதியார்
   3) சுவாமி விபுலானந்தர் 3) இராமகிருஷ்ண பரமஹம்சர்
8. ஞானசம்பந்தரும் அப்பரும் படிக்காசு பெற்று அந்த நிதி மூலம்
   1) பஞ்சம் நீக்கினர் 2) கோவில் கட்டினர்
   3) பிதிர் வழிபாடு செய்தனர் 4) கல்விச் சாலைகள் அமைத்தனர்
9. பல்லக விளக்கது
   1) இருள் கெடுப்பது 2) சோதி உள்ளது
   3) பலரும் காண்பது 4) நமச்சிவாயவே
10. சிவன், திருமால், அம்பிகைக்குரிய சிறப்பு திருநாள் முறையே.
    1) திருவோணம், திருவாதிரை, பூரம் 2) திருவாதிரை, திருவோணம், பூரம்
    3) பூரம், திருவோணம், திருவாதிரை 4) பூரம், திருவாதிரை, திருவோணம்
11. உத்தராயண ஆரம்பத்தில் கொண்டாடப்படும் பண்டிகை?
    1) தீபாவளி 2) ஆடிப்பிறப்பு 3) பொங்கல் 4) புத்தாண்டு

12. முதலாழ்வார்களுள் அடங்காதவர்.
    1) பேயாழ்வார் 2) பூதத்தாழ்வார்
    3) பொய்கையாழ்வார் 4) திருமழிசையாழ்வார்
13. மணிமுடிச் சோழனின் மகளாக அவதரித்தவர்.
    1) மங்கையர்க்கரசியார் 2) திலகவதியார்
    2) காரைக்கால் அம்மையார் 4) ஆண்டாள்
14. சுந்தரர், சண்டேசுரர், பூசலர் முதலியோர் எந்நெறி நின்று இறைவனை வழிபட்டனர்?
    1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்
15. முதன் முதலாக முருகப்பெருமானுடன் வீரவாகு தேவரும் நடந்து சென்ற தலம்.
    1) இராமேஸ்வரம் 2) பழனி 3) கதிர்காமம் 4) காசி
16. ''ஆவுரஞ்சிக்கல்'' அமைக்கப்படுவதன் நோக்கம் யாது?
    1) தாகம் தீர்க்க 2) சுணையைப் போக்க, முதுகைத் தேய்க்க
    3) செடி, கொடிகளை வளர்க்க 4) இளங்கன்றுக்களுக்குப் பாலூட்ட
17. பஞ்ச புராணத்தில் திருவிசைப்பா ஓதப்படுவது.
    1) ஐந்தாவதாக 2) இரண்டாவதாக 3) மூன்றாவதாக 4) நான்காவதாக
18. அரிஹர புத்திரன் என அழைக்கபடும் தெய்வம்.
    1) ஐயனார் 2) வீரபத்திரர் 3) பெரியதம்பிரான் 4) காத்தவராயன்
19. இருவினை ஒப்பு ஏற்படுவது.
    1) இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிக்கும் போது.
    2) ஆன்மாவுக்கு நல்லறிவு நிலையை இறைவன் கொடுக்கும் போது.
    3) ஆணவத்தின் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினையின் போது.
    4) மும்மலமான அழுக்கை நீக்கிப் புதிய மலத்தைப் பற்றும் போது.
20. வானவன் மா தேவீஸ்வரம் என்னும் சிவாலயம் யாருடைய தாயாரின் பெயரில் கட்டப்பட்டது?
    1) இராஜ இராஜசோழன் 2) இராஜேந்திர சோழன்
    3) கரிகாலச் சோழன் 4) குளக்கோட்டன்
21. ''முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்ற பாடலடியை எடுத்துக் கொடுத்தவர்.
    1) சிவன் 2) சரஸ்வதி 3) விநாயகர் 4) முருகன்
22. ''கட்டுக்கலை'' செல்வவிநாயகர் ஆலயத்தின் மூலவராக விளங்குபவர்.
    1) சிவபிரான் 2) விநாயகர் 3) முருகன் 4) அனுமான்
23. ஈழத்துச் சிதம்பரத்தில் வருடத்திற்கு எத்தனை தடவை திருவிழாக்கள் நடைபெறும்?
    1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) நான்கு
24. பலா மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட ஆலயம் எது?
    1) வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலயம்
    2) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
    3) திமிலைத்தீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்
    4) தாந்தா மலை முருகன் ஆலயம்
25. ''போற்றி'' என்பதன் பொருள் யாது?
    1) நமச்சிவாய 2) காத்தருள்க
    3) போற்றுகிறேன் 4) அருள் புரிய வேண்டும்
26. பின்வரும் பிரபந்தங்களில் ஆண்டாள் பாடிய நூல்?
    1) திருப்பாவை 2) திருமாலை
    3) திருச்சந்தவிருத்தம் 4) திருப்பள்ளியெழுச்சி

27. 108 அடி உயர நவதள இராஜகோபுரத்தையுடைய ஆலயம் எது?
1) பொன்னம்பலவாணேஸ்வரர் 2) வெருகல் முருகன் ஆலயம்
3) மாத்தளை முத்துமாரி அம்மன் 4) ஈழத்துச் சிதம்பரம்

28. உத்திராயணம், தட்சணாயனம் என்பவற்றின் ஆரம்பத்தைக் கொண்ட பண்டிகைகள் முறையே.
1) பொங்கல், ஆடிப்பிறப்பு 2) ஆடிப்பிறப்பு, பொங்கல்
3) தீபாவளி, பொங்கல் 4) விளக்கீடு, வருடப்பிறப்பு

29. பல்லக விளக்கது பலரும் காண்பது என்பதில் அடங்காத விளக்கு எது?
1) சூரியன் 2) சந்திரன்
3) தாரகை 4) அக்கினி

30. ''கிருகஸ்தம்'' என்ற படிநிலை குறிக்கும் பொருள் எது?
1) துறவு நிலை 2) துறவுக்கு ஆயத்தமாகும் நிலை
3) மாணவ நிலை 4) இல்லற நிலை

(30x1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. மார்க்கண்டேயரின் உயிரைக்காத்த மந்திரம் எதுவென சம்பந்தர் குறிப்பிடுகிறார்?
2. நமது நாட்டில் பழக்கத்தில் உள்ள இரண்டு பஞ்சாங்கங்களும் எவை?
3. அருணாசலத் தேசிகருக்கு தேசிகர் என்ற பட்டத்தைச் சூட்டியவர் யார்?
4. மக்களின் பசியைப் போக்க கஞ்சித்தொட்டித் தருமப் பணியை மேற்கொண்டவர் யார்?
5. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம் எது?
6. பட்ச விரதங்கள் 2 தருக.
7. ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே'' என்ற பிரபந்தம் பாடியவர் யார்?
8. தமிழ் வேதம் ஓதுவதற்கு யோக்கியர் யார்?
9. அந்தகரணங்கள் இரண்டு தருக?
10. மங்கையர்க்கரசியாரின் தந்தை பெயர் என்ன?
11. கேதார கௌரி விரதகாலத்தில் தினமும் எதனால் அர்ச்சனை செய்வர்?

(11 புள்ளிகள்**)**

12. பின்வரும் சிவபுராணத்தில் அடுத்து வரும் நான்கு அடிகளை மட்டும் எழுதுக.
''விலங்கு மனத்தால் விமலா உனக்கு .....''

(04 புள்ளிகள்**)**

பகுதி - III

1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. பாடியவரின் பெயரை எழுதுக.

1. "போற்றியே நமச்சிவாய....." 2. "நையாத மனத்தினை ....."
3. "சொல்லாண்ட சுருதிப்பொருள் ....." 4. "ஐந்து பேரறிவும் ....."

(2x7 =14 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

1. "இன் சொலால் ஈரம் ....." 2. "மறவற்ற மாசற்றார் ....."
3. "தக்கார் தகவிலார் ....." 4. "அடக்கம் அமரருள் ....."
5. "நன்றிக்கு வித்தாகும் ....." 6. "அறன் கடை நின்றாருள் ....."

(1x5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - IV

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. சைவநாற்பாதங்கள் எவை?
2. அட்டாங்க யோகங்களில் நான்கினைக் குறிப்பிடுக.
3. சமயக்குரவர் நால்வரும் பின்பற்றிய மார்க்கங்களைக் குறிப்பிடுக.

(3 + 2 + 4 = 9 புள்ளிகள்**)**

2. 1. இருக்கு வேதத்தில் துதிக்கப்படும் மூவர் பெயர்களைத் தருக.
2. தென்புலத்தார் எனப்படுவோர் யாவர்?
3. விருந்தோம்பல் பண்பினைப் போற்றிக்காத்த நாயன்மார்கள் மூவர் பெயர்களைத் தருக. நீர் குறிப்பிட்ட நாயனார் ஒருவர் விருந்தோம்பல் பண்பை பேணிய முறையை விளக்குக.

(3 + 2 + 4 = 9 புள்ளிகள்**)**

3. 1. விரதங்கள் வகுக்கப்படும் நான்கு அடிப்படைகளைத் தருக.
2. கோயில்களில் ''வாழை வெட்டு'' இடம் பெறுவதற்கான காரணம் எதனை அடையாளமாகக் கொள்ளப்படுகிறது?
3. சதுர்த்தி, சங்கடசதுர்த்தசி இரண்டுக்குமிடையிலான வேறுபாடு யாது? சதுர்த்தியின் போது படைக்கப்படும் நிவேதனங்கள் 4 தருக?

(2 + 2 + 5 = 9 புள்ளிகள்**)**

4. 1. செல்வச்சந்தி ஆலயத்தின் பிரதம பூசகரின் பூசையின் போது அணியும் ஆடைகள் எவை?
2. திமிலைத் தீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயத்தில் வருடாந்த விழாக்களில் கண்ணன் லீலைகளாகக் கொண்டாடப்படும் நிகழ்வுகள் மூன்று தருக.
3. வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும் உற்சவங்கள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**

5. 1. கன்மத்தின் மூன்று வகைகள் எவை?
2. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை? அதில் எல்லாம் அறியும் பண்புடையவரின் சிறப்புக்களை விளக்குக.
3. சைவ சமயத்தின் பொது நூல் எது?

(3 + 5 + 1 = 9 புள்ளிகள்**)**

6. பின்வருவனவற்றுள் ஏதாவது மூன்றுக்கு மட்டும் சிறுகுறிப்பு எழுதுக.

1. இல்லறம்
2. விரதங்கள்
3. தல யாத்திரை
4. நாட்டார் வழிபாடு
5. மங்கையார்கரசியார்
6. ஈழத்துச் சிவன் ஆலயம்

(9 புள்ளிகள்**)**

(4 x 9 = 36 புள்ளிகள்**)**